மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*75. வினா.—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழைய கடலூர்—சிதம்பரம் சாலையில் வெள்ளாற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு அ. இராசமாணிக்கம் : இந்தப் பாலம் கட்டுவதினால் நாகையிலிருந்து சென்னைக்கு வருவதற்கு தொலை தூரம் சற்றேறத்தாழ 30 மைல் குறையும் என்பதினால் பாலம் கட்டுவதினால் போக்குவரத்துக்கு நன்மையாக இருக்கும் என்பதை அரசு அறிந்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பாலம் கட்டுவதற்கு ரூ. 25 லட்சம் செலவாகும். இதை கிழக்குக் கரைச் சாலைப்பணியில் சேர்க்க வேண்டும் என்று நம்முடைய அரசின் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது இப்பொழுது அனுமதிக்கப் பட்டிருக்கிற பட்டியலில் இடம் பெறவில்லை. அடுத்த பட்டியலில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

*76 Q.—Thiru R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether sanction has been accorded for the construction of the Ganapathiankadavu bridge across Kuzhithurai river in Kollencode-Puthukadai road in Vilavancode taluk, Kanyakumari district ; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

1972 டிசம்பர் 7]

திரு ஆர். பொன்னப்ப நாடார் : பாம்பே-கன்னியாகுமரி ரோடு திட்டப்படி இந்தப் பாலம் முக்கியமாக ஏற்படவேண்டும். அன்றிருந்த திருவாங்கூர்-கொச்சி அரசு இதைத் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையைப் பொறுத்தவரையிலே இப்பொழுது கிராமச் சாலையாகக் கருதப்படுகிறது. இதற்கு ஆகக்கூடிய செலவு, நில ஆர்ஜிதம் உட்பட, ரூ. $22\frac{1}{2}$ லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டு செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்க்கப்படவில்லை. அடுத்த ஆண்டு இதைச் செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

Cultivation of barley.

***77 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether there is any proposal to cultivate barley in Nilgiris and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் பார்லி தற்போது சிறு பகுதியில் பழமையான முறையில் பயிரிடப்படுகின்றது. அதனால் அம் முறையில் கிடைக்கும் ஆதாயம் குறைவாக உள்ளது. பார்லி பயிரிடுவதில் நவீன முறைகளையும் முனைப்பான நடைமுறைகளையும் பின்பற்றுவதன் மூலம், பார்லி உற்பத்தியை அதிகப்படுத்தவும் அதிகப் பரப்பளவில் பார்லி பயிரிடவும் வகை செய்யும் செயற்திட்டம் ஒன்று உள்ளது.

திரு எம். தேவராஜன் : இந்த பார்லியைக் கொண்டு நல்ல பீர் காய்ச்ச முடியும். உதகையில் கேட்டிக்கு அருகில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை இருந்தது. அதைப் போல ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நீலகிரியில் பார்லி தொழிற்சாலை அமைப்பதால் அது மால்ட் உற்பத்தி செய்வதற்குப் பயன்படும். பார்லிக்கு நல்ல தேவை இருப்பதால் அதை அதிக அளவில் பயிரிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன் : இது இண்டோ-ஜெர்மன் திட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டிருக்கிறதா அல்லது விவசாயத் துறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தனிப்பட்ட முறையில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.